**செய்தி வெளியீடு எண் : 967** **நாள்: 14.06.2022**

## செய்தி வெளியீடு

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மற்றும் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆகிய துறைகளின் முக்கியத் திட்டங்கள், அறிவிப்புகள், பணிகளின் முன்னேற்றங்கள் குறித்து முதலமைச்சரின் தகவல் பலகை (Dash board) தரவுகளின் அடிப்படையில் ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது**

வருவாய்த்துறையானது மாநிலத்தின் சீரான சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கும், சாமானிய மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் முக்கிய பங்காற்றுகிறது. அரசின் பல்வேறு சமூகப் பொருளாதாரத் திட்டங்கள் இத்துறையின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. பொதுமக்கள், விவசாயிகள் மற்றும் மாணவர்களுக்குத் தேவையான பல்வேறு ஆவணங்கள், பட்டா, சிட்டா, அடங்கல், சாதிச்சான்று, இருப்பிடச் சான்று, வருமானச் சான்று போன்ற பல்வேறு சான்றிதழ்களை வழங்கி வருகிறது. மேலும், பேரிடர் காலங்களில் மக்களுக்கு தேவையான உணவு, உறைவிடம், அத்தியாவசியப் பொருட்கள், நிவாரண உதவிகள் வழங்குதல் போன்ற பல்வேறு பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 25.5.2022 அன்று சென்னை, கிண்டியில் உள்ள வட்டாட்சியர் அலுவலகத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டு அங்கு பட்டா, சாதிச் சான்றிதழ், குடும்ப அட்டை மற்றும் பிற வருவாய்த் துறையின் சேவைகளைப் பெற வந்திருந்த பொதுமக்களிடம் அவர்களின் கோரிக்கைகள் மற்றும் தேவைகள் குறித்து கேட்டறிந்தார். மேலும், வருவாய்த் துறை மூலம் பொதுமக்களுக்கு தேவையான சான்றிதழ்கள் வழங்குதல் மற்றும் பிற அரசு சேவைகள் அனைத்தையும் உடனுக்குடன் எந்தவிதத் தொய்வுமின்றி வழங்கிட வேண்டும் என்றும் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

அதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இன்று (14.6.2022) தலைமைச் செயலகத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மற்றும் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆகிய துறைகளின் முக்கியத் திட்டங்கள், அறிவிப்புகள், பணிகளின்

முன்னேற்றங்கள் குறித்து முதலமைச்சரின் தகவல் பலகை (Dash board) தரவுகளின் அடிப்படையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மக்களுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள துறையான வருவாய்த்துறை, அரசுக்கும், மக்களுக்கும் பாலமாக விளங்கிக் கொண்டிருக்கிறது என்றும், அத்தகைய முக்கியமான இத்துறையின் மூலமாக பல சேவைகளை பொதுமக்களுக்கு தங்குதடையின்றி கொண்டு சேர்த்திட வேண்டும் என்றும், வட்டாட்சியர் அலுவலக அலுவலர்கள் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் அளவில் உள்ள சேவைகள், எந்த தாமதமுமின்றி உடனடியாக வழங்கப்படுவதை உறுதி செய்திட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். மேலும், வருவாய்த் துறையின் மூலமாக 25-க்கும் மேற்பட்ட சான்றிதழ்கள் வழங்குவதில் மாவட்ட அளவிலான செயல்திறன் குறித்தும், எங்கு அதிகமாக பணிகள் நிலுவையில் இருக்கிறது என்பது குறித்தும், அவற்றை எதிர்கொள்ளும் நடைமுறைச் சிக்கல்கள் மற்றும் களைவதற்கான வழிவகைகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

ஏற்கனவே வழங்கப்பட்ட சான்றிதழ்களின் நடைமுறையை மாற்றி அமைத்து அதை எளிதாக அவர்களுக்கு வழங்க வேண்டிய வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும். ஒவ்வொரு சான்றிதழ் விண்ணப்பிக்கும் போது, மீண்டும், மீண்டும் பொதுமக்கள் தங்கள் ஆதாரத்தை சமர்ப்பிக்க வேண்டிய நிலை தேவையில்லை என்ற நிலையை விரைவாக கொண்டு வர வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

ஆன்லைன் பட்டா பரிமாற்றத்தின் முன்னேற்றம், அப்பணிகள் தாமதமின்றி செயல்படுகிறதா என்பதையும், விண்ணப்பங்களின் நிலையை அவ்வப்பொழுது விண்ணப்பதாரர்கள் தெரிந்து கொள்ளும் வழிமுறைகளையும் எளிதாக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அதேபோல, ஓய்வூதியத் திட்டத்தின் கீழ், முதியோர், ஆதரவற்ற விதவை, கைவிடப்பட்ட பெண்கள், மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கு ஓய்வூதியம் மற்றும் பல பயன்கள் பெறுவதற்காக 4,816 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது. இந்தத் திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்திட வேண்டும் என்று உத்தரவிட்டார்.

**<u>கூட்டுறவு, உணவு மற்றும் குடிமைப் பொருள் வழங்கல் துறை</u>**

“அனைவருக்கும் உணவு பாதுகாப்பு” என்பது அரசின் உணவுக் கொள்கையில் முதன்மையானதாகும். ஏழை மற்றும் நலிந்த பிரிவினருக்கு உணவுப் பாதுகாப்பை வழங்குவதே அரசின் பொது விநியோகத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். பொது விநியோகத் திட்டத்தில் அத்தியாவசியப் பொருட்களை குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்வதற்கான அலகாக நியாய விலைக் கடைகள் செயல்படுகிறது. இத்தகைய மிக முக்கியமான துறையாக கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை விளங்கிக் கொண்டிருக்கிறது.

ஏழை எளிய மக்கள் அரசினுடைய உதவிகளை, நியாய விலைக்கடைகள் மூலமாக நேரடியாக பெற்று பயனடைந்து கொண்டிருக்கிறார்கள். இத்துறை சிறந்த செயல்திறனுடன் செயல்படுவதற்கு தேவையான அனைத்து உதவிளையும் அரசு மேற்கொள்ளும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆய்வுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

நியாயவிலைக் கடைகளின் வாயிலாக அத்தியாவசியப் பொருட்கள், தரமான வகையில் பொதுமக்களுக்கு எந்தவித தங்குதடையின்றி வழங்கப்படுவதை உறுதி செய்திடவும், மாவட்ட வாரியாக அத்தியாவசியப் பொருட்களின் தேவையை அறிந்து, அந்தந்த மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்து வழங்கிடவும் உத்தரவிட்டார்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஒவ்வொரு மண்டலத்திலும் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யும் நெல்லை பாதுகாப்புடன் கிடங்கில் சேமித்து வைப்பதற்கு தகுந்த முன்னேற்பாடுகளை செய்திட வேண்டும் என்றும், எதிர்வரும் மாதங்களுக்கான தேவைகளுக்கு தயார் நிலையில் இருந்திட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

அரிசி, சர்க்கரை, கோதுமை, துவரம் பருப்பு மற்றும் பாமாயில் ஆகியவற்றை தேவைக்கேற்ப கொள்முதல் செய்து பொது விநியோகத் திட்டத்திற்கு வழங்கும் நடவடிக்கைகளில் எவ்வித குறைபாடின்றி மேற்கொள்ள உணவுத்துறை முழு கவனம் செலுத்திட வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

மக்களை நேரடியாக எதிர்கொள்ளும் நியாயவிலைக்கடை ஊழியர்களுக்கு முறையான பயிற்சிகள், ஆலோசனைகள் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டும் என்றும், குடும்ப அட்டை விண்ணப்பிக்கும் நபர்களுக்கு கால வரையறை நிர்ணயம் செய்து உரிய பரிசீலனை செய்து வழங்கிடவும், தகுதியில்லாதவர்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்குவதைத் தடுத்திடவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையர் திரு.எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப., நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. நா. முருகானந்தம், இ.ஆ.ப., கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திரு. குமார் ஜயந்த், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in